IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.161/2021

Deposition of Witness PW1

Name : ஹிமாயுன் அகமது Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் தற்போது பெரிய சேம்பூரில் குடியிருந்து வந்து நான் கமிஷனுக்கு தோல் வாங்கி தைத்துக் கொடுக்கும் வேலை செய்து வந்தேன். 15.07.1993 அன்று சாலியா பிவி என்பவரிடமிருந்து BP பெரிய அக்ரகாரம் என்ற பகுதியில் 1404 சதுரடி காலி இடத்தை விலைக்கு வாங்கினேன். நான் விலைக்கு வாங்கிய பிறகு அந்த இடத்திற்கு சென்று வந்து கொண்டிருந்தேன். நான் விலைக்கு வாங்கிய இடத்தில் ஒரு கால் பகுதியில் சாலியா பிபியின் சகோதரி பாத்துமுத்து சபேரா பிவி அவரது பாகத்தில் குடியிருந்து வந்தார். சாலியா பிபி 01.09.2001 அன்று இறந்து விட்டார். சாலியா பிவி வாரிசு இன்றி இறந்து விட்டதாகவும் அவரது வாரிசு தான்தான் எனக்கூறி சாலியா பீவியின் சகோதரி மகன் காதர் ஒலி, சாலியா பிவியின் இடத்தையும் சாலியா பிவி எனக்கு கிரயம் செய்து கொடுத்த இடத்தையும் சேர்த்து காதர் ஒலியின் மகன்கள் மற்றும் மகள்கள், ரஹ்மான்சா ஜெய்பூன் நிஷா, மற்றும் மற்ற இரண்டு பேருக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார். காதர் ஒலி ஏற்படுத்திய ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்த ஒருவர் என்னிடம் தகவல் சொன்னதின் பேரில் நான் மேற்படி விவரங்கள் தெரிந்து கொண்டு காதர் ஒலி இடம் சென்று கேட்டபோது, காதர் ஒலி என்னிடம் எனக்கு இடமில்லை போடா என்று கூறிவிட்டார். அதன் பிறகு நான் அக்ரகாரம் காவல் நிலையம் சென்று புகார்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.10.17 19:23:05 +0530

கொடுத்தேன். போலீசார் இது சிவில் வழக்கு எனக்கூறி நீதிமன்றத்திற்கு செல்லுமாறு கூறிவிட்டனர். அதன் பிறகு நான் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சாலியா பிவி எனக்கு 15.07.1993 அன்று ஏற்படுத்திய கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.03.2008 அன்று முதலாம் எதிரி இரண்டாம் எதிரிக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரம் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21.03.2008 அன்று முதலாம் எதிரி ஐந்தாம் எதிரிக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரம் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21.03.2008 அன்று முதலாம் எதிரி மூன்றாம் எதிரிக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரம் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

21.03.2008 அன்று முதலாம் எதிரி நான்காம் எதிரிக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரம் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் எதிரிகள் ஆவணங்கள் ஏற்படுத்தியது சம்பந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளருக்கு 14.11.2018 தேதி அன்று அனுப்பிய புகார் மற்றும் புகாரை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ. 7ஆக குறியீடு செய்யப்படுகிறது.

24.11.2018 தேதி அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மற்றும் புகாரை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை ம.சா.ஆ. 8 முதல் ம.சா.ஆ. 9ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எனது நிலத்தின் மீது எதிரிகள் மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளதால் எதிரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.10.17 19:23:17 +0530